26.11.2025 Mcop 272/2021 எ.ம.சா 1 வைரமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரூரை தாக்கல் செய்வதற்கு முன்னர் மனுதாரர் தாக்கல் செய்த மனு மற்றும் காவல்துறையினர் ஆவணங்கள் பார்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்த லாரி ஒட்டுனர் மீது முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த லாரியின் ஒட்டுனர் மீது தவறு இல்லை என எடுத்துரைப்பதற்கு சட்டரீதியான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரூரை தாக்கல் செய்வதற்கு முன்னர் களப்பணியாளர் அறிக்கை பார்த்து தாக்கல் செய்யப்பட்டதா என்றால் பார்த்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் ஒட்டி சென்ற வாகனத்தை பொறுத்து திடீரென நிறுத்திவிட்டார் என கூறுவதற்கு எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிறுத்தியிருந்த வாகனத்தின் மோதிவிட்டதாக எந்தவிதமான ஆவணங்களும், சாட்சிகளும் இல்லை என்றால் சரிதான். 1ம்எதிர்மனுதாருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. விபத்தின் போது விபத்து பதிவேட்டில் மனுதாரர் மது அருந்தி இருந்தார் என கூறப்பட்டிருந்தாலும் மதுவின் ஆளுகையில் இருந்தார் என சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் மனுதாரர் நல்ல உடல்நிலையிலும், மன நிலையிலும் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆல்கஹால் கலந்த மருந்துகளை உட்கொண்டால் மது வாசனை வரும் என்றால் அது பற்றி தெரியாது. மதுவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தார்

என கூறுவதற்கு அவருடைய ரத்த மாதிரி, சிறுநீர் மாதிரி எடுத்து பரிசோதனை செய்யப்பட்டதா என்றால் இல்லை. காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கூடாது என்பதற்காக விசாரணை செய்யாமல் எதிரூரை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி
தென்காசி.